2011 ஜூன் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் அன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களால் 7–6–2011 ஆம் நாள் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

2. அறிவிப்புகள்

பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(அ) மதிப்பீட்டுக் குழு

2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. பி. ஜி. நாராயணன்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. செ. தாமோதரன்
4. திரு. தங்க தமிழ்ச் செல்வன்
5. திரு. ஆர். சாமி
6. திரு. வி. மூர்த்தி

7. திரு. ப. தன்சிங்
8. திரு. வ. நீலகண்டன்
9. திருமதி. த. இந்திரா காந்தி
10. திரு. ஆர். சுந்தர்ராஜன்
11. திரு. டி. ஆர். பி. ராஜா
12. செல்வி கே. பாலபாரதி
13. திரு. எம். ஆறுமுகம்
14. திரு. ஜே. ஜி. பிரின்ஸ்
15. முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா
16. டாக்டர் க. கிருஷ்ணசாமி

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 196–ன்கீழ் திரு. பி.ஜி. நாராயணன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திருமதி. ஆர். ராஜலட்சுமி
2. திரு. கே.பி. அன்பழகன்
3. திரு. வி.பி. கலைராஜன்
4. திரு. ஒ.கே. சின்னராஜ்